இணைப்பு II

[407 ஆம் பக்கத்தில் இனம் 6 [1]-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போதுள்ள இணைக்கப் பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் மொழிவாரி மாநிலப் பிரிவுக்கு முன்னர் (அதாவது 1956–க்கு முன்னர்) திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியத்தின் (Devaswoms Board) கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இத்திருக்கோயில்கள் நிர்வாகத் திற்காக 1956-க்குப் பின்னர் கன்னியாகுமரி தேவஸ்வ வாரியம் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. இந்த வாரியம் இந்து அறக்கட்டளைகள் துறை ஆணையாளரின் நேரடி மேற் பார்வையில் செயல்பட்டு வந்தது. 1975-ம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1959-ம் ஆண்டு இந்து அறக் கட்டளைகள் சட்டம், மேற்கூறிய திருக்கோயில்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தற் போது கன்னியாகுமரி மற்றும் செங்கோட்டை தாலுக்காவிலுள்ள எல்லாக் கோயில்களும் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள் என்ற ஒரே தொகுதியாக (Group) கருதப் படுகின்றன.

மேற்கூறிய தேவஸ்வங்களில் பணிபுரியும் உள்துறை ஊழி யர்கள் சங்கம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அரசுக்கு ஜூன் மாதம் அனுப்பியுள்ளது.

1. ஆலய ஊழியர்களை அரசு கடை நிலை ஊழியர்களாக மாற்ற வேண்டும்.

2. அரசு கடைநிலை ஊழியர்களுக்குள்ள அனைத்து சலுகை களும் ஆலய ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

3, ஆலய ஊழியர்களின் மீது எடுக்கப்பட்டுள்ள பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்ய வேண்டும்.

4. ஆலய ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய எல்லா ''ஸ்பெஷல்'' டியூட்டி அலவன்ஸ்களும் உடனடியாக வழங்க வேண்டும்.

ஆலயங்களில் பணிபுரியும் உள்துறை சிப்பந்திகள் யாவரும் ''கண்டின்ஜன்ட்'' ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இச்சிப்பந்திகள், 'கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம்' என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்த ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,046 ஆகும். இவர்கள் மேல் சாந்தி, நாதஸ்வரம், காணியாட்சி, பாகவதர், தேவாரம், ருத்திரஜபம், பலவேலை கட்டியம் போன்ற 37 வித பதவி களில் பணியாற்றி வருகின்றனர். இவர்களது வேலையின் தன்மை யும், வேலையின் நேரமும் அவரவரது பணிக்கு ஏற்ப மாறு படுகின்றன. கன்டின்ஜன்ட் ஊழியர்களின் ஊதியம் ஆலயத்

1978 செப்டம்பர் 14]

திற்கு ஆலயம் மாறுபட்டு உள்ளது. பணிபுரியும் நாட்களுக்கு மட்டுமே இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விடுப்பிற்கும், விடுப்பு ஊதியத்திற்கும் இவர்களுக்குத் தற்போது எவ்வித ஊதியமும் வழங்கப்படுவது இல்லை. இவர்களில் சில பிரிவினருக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 10. 72, அதிகபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 115 ஆகும்.

கன்டின்ஜன்ட் ஊழியர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5 வீதம் 1. 7. 1977 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. திரும்பவும் 1. 7. 1978 முதல் வேலைப்பளு குறைவாக உள்ள ஊழியர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5-ஊதிய உயர்வும் வேலைப்பளு அதிகமாக உள்ள ஊழியர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 10 ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அளவில் ஊதியம் அளிக்கப்படும் பொழுதே கன்டின்ஜன்ட் ஊழியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு சம்பள வகைக்கு ரூ. 9,37,056 செலவிடப்படுகிறது. இது தவிர, அலுவலக சிப்பந்திகளுக்கு (Devaswoms Establishment Employees) சம்பள வகைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6, 52, 025 செலவிடப்படுகிறது. ஆக, 487 திருக்கோயில்களின் சிப்பந்திகளுக்காக ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 15, 89, 081 செலவிடப்படுகிறது. இவை தவிர, கோயில் பூஜை முதலிய வகைகளுக்கான செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 8 லட்சம் ஆகிறது. இத்திருக்கோயில்களின் சராசரி ஆண்டு வருமானம் சுமார் ரூ. 25, 00, 000 ஆகும். தற்போது ஊழியர்களுக்கு மொத்த வருமானத்தில் 65. 50 சதவிகிதம் செலவிடப்பட்டு வருகிறது.

கன்டின்ஜன்ட் சிப்பந்திகள் நடத்தும் 'கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம்' கேட்டுக் கொள்கிறபடி அரசு கடைநிலை ஊழியர்களுக்குத் தரப்படும் அடிப்படை சம்பளத்தை இவர்களுக்கும் கொடுப்பதாய் இருந்தால் ஆண்டு ஒன்றுக்கு தற்பொழுது செலவாகும் ரூ. 9, 37, 056-க்குப் பதிலாக ரூ. 16, 31, 760 செலவாகும். சுமார் ரூ. 7 லட்சம் கூடுதல் செலவாகும்.

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் பராமரிப்புக்கு அரசுமானியமாக ஆண்டொன்றுக்கு ரூ.13,50,000 1956-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது விலைவாசி உயர்வினால் ஆலயங்களின் மராமத்து, ஊதியம் வழங்கல் போன்றவைகளுக்கு இந்தத் தொகை போதுமானதாக இல்லை. இத்திட்டத்தின்படி நித்திய பூஜை, படித்தரம் முதலியவற்றுக்கும் மாதம் மற்றும் வருடாந்திர திருவிழாக்களுக்கும் கணிசமான தொகை வருவாயிலிருந்து செலவிட வேண்டியுள்ளது. ஆகையால் இந்த அரசு, மானியத் தொகையைக் கொண்டும் மற்ற வருமானங்களைக் கொண்டும் சிப்பந்திகள் கோரும் ஊதிய உயர்வை கொடுக்க இயலாத நிலை உள்ளது.

[1978 செப்டம்பர் 14

இந்த கன்டின்ஜன்ட் ஊழியர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் எந்தக் காரியமும் செய்யப்படுவதில்லை.

தற்போது தற்காலிகப் பதவி நீக்கத்தில் 10 நபர்கள் உள்ளனர். இந்த பத்து நபர்களில் 2 நபர்கள் வேலைக்கு அவர்களாகவே வரவில்லை. மீதம் 8 நபர்கள் திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபட்டிருந்ததால் அவர்களைத் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. விசாரணையை ஒரு மாத காலத்திற்குள் முடித்து முடிவான உத்தரவினை பிறப்பிக்கச் செயல் அலுவலரைக் கோரப்பட்டுள்ளது. தற்போது யாரையும் இடமாற்றம் செய்வதும் நிறுத்தப்பட்டு விட்டது.

ஸ்பெஷல் டியூட்டி அலவன்ஸ், மண்டைக்காடு திருவிழாவின்போதும் மற்றும் நவராத்திரி விழாவின் போது சுவாமி திருவனந்தபுரம் செல்லும் போது மட்டும் வழங்கப்படுகிறது. இந்த அலவன்ஸ் எவ்வித பாக்கியும் இன்றி பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது.

ஆகையால், கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம் கேட்டுக் கொண்டபடி, மேற்கூறிய ஊழியர்களை அரசு கடை நிலை ஊழியர்களாக மாற்றவோ, அல்லது அரசு கடை நிலை ஊழியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளையும் வழங்கவோ, இவ்வாலயங்களின் நிதி நிலைமை, மற்றும் ஏற்படக்கூடிய நிர்வாகச் சிக்கல் காரணமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஏனைய இரண்டு கோரிக்கைகள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.

இணைப்பு III

[409 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கரூர் ஊராட்சி ஒன்றியம் இனும் கரூர் ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வெங்கமேடு கிராமத்தில் ஒரு இளநிலைப் பள்ளி ஒன்றினை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியைச் சார்ந்த வகுப்புகள் குளத்துப் பாளையம் சாலையின் வடபறமும் தென்புறமுமாக இயங்கி வருகின்றன. வடபுறத்திலுள்ள மூன்று கட்டிடங்களில் இரண்டு கட்டிடங்கள் சிமெண்டு ஓடுகள் கொண்ட கூரை போட்ட நல்ல கட்டிடங்களாகும். மற்ற ஒரு கட்டிடம் தற்காலிக கட்டிடம், ரூபாய் 3,000 மதிப்பீட்டில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கரூர் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து பள்ளியில் படிக்கும் மாணவர்களின் இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு கட்டப்பட்டதாகும். இந்த தற்காலிக கட்டிடம் 15 மீட்டர்கள் X